கர்த்தரைத் துதியுங்கள் அவர் நல்லவர்

Praise the Lord, for He is Good

Album 34 Song 6

Thu 10/05/2007 136 சங்கீதம்

கர்த்தரைத் துதியுங்கள்
அவர் நல்லவர்
அவர் கிருபையோ
என்றும் உள்ளது

தேவாதி தேவனைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
பெரிய அதிசயங்களை செய்பவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

வானத்தை ஞானமாய் படைத்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
பூமியை அறிவால் படைத்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

பெரிய சுடர்களைப் படைத்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
சிறிய நட்சத்திரங்களையும் படைத்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

பகலை ஆளச் சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
இரவை ஆள சந்திரனை படைத்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

எகிப்தியரின் தலைச்சன்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

DATE

அவர்களின் நடுவிலிருந்து இஸ்ரவேலைப் புறப்படச்செய்தவரைத் துதியுங்கள்

அவர் கிருபை என்றுமுள்ளது

சிவந்த சமுத்திரத்தைப் பிளந்தவரைத் துதியுங்கள்

அவர் கிருபை என்றுமுள்ளது

இஸ்ரவேலைக் கடந்துபோகப்பண்ணினவரைத் துதியுங்கள்

அவர் கிருபை என்றுமுள்ளது

பார்வோனை சமுத்திரத்தில் கவிழ்த்துப்போட்டவரைத் துதியுங்கள்

அவர் கிருபை என்றுமுள்ளது

அவன் சேனைகளையும் அதிலே மூடிப்போட்டவரைத் துதியுங்கள்

அவர் கிருபை என்றுமுள்ளது

தமது ஜனத்தை வனாந்தரத்தில் நடத்தினவரைத் துதியுங்கள்

அவர் கிருபை என்றுமுள்ளது

நம்முடைய தாழ்வில் நம்மை நினைப்பவரைத் துதியுங்கள்

அவர் கிருபை என்றுமுள்ளது

பெரிய ராஜாக்களை சங்கரித்தவரைத் துதியுங்கள்

அவர் கிருபை என்றுமுள்ளது

பிரபலமான ராஜாக்களையும் அழித்தவரைத் துதியுங்கள்

அவர் கிருபை என்றுமுள்ளது

எமோரியரின் ராஜா-சீகோனை அழித்தவரைத் துதியுங்கள்

அவர் கிருபை என்றுமுள்ளது

பாசானின் ராஜா- ஓகையும் அ...

அவர் கிருபை என்றுமுள்ளது

...ளான் தேசத்தை சுதந்தரமாகத் தந்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
தமது இஸ்ரவேலுக்கே சுதந்தரமாகக் கொடுத்தவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது

பரலோகத்தின் உன்னதமான தேவனைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
மாம்சமான யாவுக்கும் உணவைத்தருபவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது